# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணி (மீள்) பரீட்சை, ஆண்டு I, ~~2020~~ 2019

## குற்றவியற் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

எவையேனும் **நான்கு** வினாக்களுக்கு **மட்டும்** விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. தண்டனைச் சட்டம் ஒன்றில் உள்ள தடைசெய்யப்பட்ட செயலொன்றை ஒருவர் குற்ற மனத்துடன் செய்தால் மட்டுமே அவனுக்கு/அவளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட முடியும் என்ற நிலைப்பாட்டையே, "குற்ற மனம் இன்றிக் குற்றம் இல்லை" *(acius non facit reum nisi mens sit rea)* என்ற முதுரையானது குறித்துரைக்கின்றது. ஆயினும், சமூகத்தினுடைய அதியுச்ச நலனைக் கருத்தில் கொண்டு, இன்றைய குற்றவியற் சட்ட ஆட்சிநெறிப் பரப்பானது இந்த முதுரைக்குப் பல்வேறு விதிவிலக்குகளை அங்கீகரிக் கின்றது.

   ஆராய்க. உமது விடையினைப் பொருத்தமான நியதிச்சட்ட மற்றும் தீர்ப்புச்சட்ட அதிகார ஆதாரங்களால் ஆதாரப்படுத்துக.

2. (அ) காமினி என்பவனும் சுனில் என்பவனும் சில காலமாக பகைமை பாராட்டிக் கொண்டிருந்தனர். உரிய நேரத்தில் சுனிலுக்கு நல்ல பாடம் தான் படிப்பிக்கவுள்ளதாக காமினி தனது நண்பனான பண்டார என்பவனுக்குக் கூறியுள்ளான். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலையில், சுனில் தனது மனைவியுடன் பெருஞ்சந்தை ஒன்றிலிருந்து தனது மோட்டார் வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் என்பதுடன் அவனது வீட்டுக்கு அருகிலுள்ள வீதியின் வளைவில் காமினி காத்துக் கொண்டுமிருந்தான். வாகனம் வேகத்தைக் குறைத்தபோது, சுனில் மீது காமினி துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தான் எனினும் அது இலக்குத் தவறி வாகனத்தின் ரயர் மீது பட்டு அதனை வெடிக்கச் செய்தது அதன்

விளைவாக ஏற்பட்ட வாகன மோதலால், சுனிலின் மனைவி அந்த இடத்திலேயே கொல்லப்பட்டாள்.

காமினியின் குற்றப் பொறுப்புடைமையினை ஆராய்க.

(ஆ) டானியல் என்பவன் தனது இரு நண்பர்களின் உதவியுடன் பெற்றோல் நிலையமொன்றை போலித் துப்பாக்கி ஒன்றைப் பாவித்து இரவில் கொள்ளையடிக்க முயற்சிக்கின்றான். இளைஞனும் சுகதேகியுமான காசாளன் குண்டு துளைக்காத கண்ணாடிக்குப் பின்னால் பாதுகாக்கப் பட்டிருந்த போதிலும், துப்பாக்கி மனிதன் பணஞ்செலுத்தும் இடத்தை நெருங்கி வருவதைக் கண்டதும் மாரடைப்பினால் இறக்கின்றான்.

மேற்கண்ட சூழ்நிலையில் சம்பந்தப்படும் சட்டப் பிரச்சனைகளை ஆராய்க.

3. (அ) ருவான் என்பவன் பாடசாலை ஒன்றின் பெண்கள் விடுதிக்குள் அதனது பின்புறப் பக்கத்தால் இரகசியமாக நுழைவதைக் காணமுடிந்தது. அப்பகுதிச் சுற்றுக்காவல் பொலிஸ்காரர் தனது மோட்டார் சைக்கிளின் முன்பக்க விளக்கினை ருவானை நோக்கித் திருப்பியதும் அவன் ஓடத் தொடங்கினான். பொலிஸார் அவனைப் பிடிக்கத் தவறிய போதிலும் விடுதியின் பின்பக்கத்தில் வெளிச்சமில்லாத பகுதிக்கருகில் அவன் விட்டுச் சென்றிருந்த தோள்பை ஒன்றினைக் கண்டெடுத்தனர். அந்தப் பையினுள், பெரியதொரு சமையலறைக் கத்தி, சற்று நீளமுடைய கயிறுத் துண்டுகள், முகத்தை மூடியொட்டும் நாடாக்கள் என்பன இருந்தன. வீதிப்பக்கமிருந்த கண்காணிப்புக் கமராவின் உதவியுடன் ருவான் அடையாளங் காணப்பட்டதுடன் சம்பவத்தின் மூன்று நாட்களின் பின்னர் கைதுசெய்யவும்பட்டான்.

ருவான் குற்றமேதும் இழைத்துள்ளானா? அங்ஙனமாயின், அவன் மீது குற்ற வழக்கிடப்படக் கூடியதான குற்றத்தின் தன்மையென்ன? அதிகார ஆதாரங்கள் தருக.

(ஆ) கேசவன் என்பவன் தலைநகரத்தின் உல்லாச விடுதி யொன்றில் குண்டொன்றை வெடிக்க வைக்கக் கருதி அந்த விடுதிக்கு தனது தோள்பையுடன் சென்றான். விடுதியின் முன்பக்க நுழைவாயிலின் அருகிலிருந்த கழிப்பறை ஒன்றினுள்ளே குண்டின் இயக்கவிசைக்கான மின்னிழை களைப் பொருத்தத் தொடங்கியதுடன் விடுதியை விட்டுச் செல்லவும் தயாரானான். அவன் கழிப்பறையிலிருந்து வெளியே வந்தபோது, தனது அபிமான நடிகையான சொனாலி என்பவள் சிறுவர்

குழுவொன்றுடன் விடுதிக்குள் நுழைவதை அவன் கண்டான். நாட்டிலுள்ள கைவிடப்பட்ட மற்றும் அநாதைச் சிறுவர்களின் சேமநலன் மேம்பாட்டுக்கான நிகழ்ச்சித் திட்டமொன்றின் படப்பிடிப்பில் அவர்கள் சம்பந்தப்பட்டிருந்தனர்.

அவர்களைக் கண்டதும், நடிகை மீதான தனது வியப்புணர்வாலும் சிறுவர்கள் மீதான அன்பினாலும் தனது மனதை மாற்றிக்கொண்ட கேசவன், கழிப்பறைக்கு விரைந்து சென்று குண்டினைச் செயலிழக்கச் செய்யத் தொடங்கினான். அவன் அந்த தோள்பையினைத் திரும்பவும் எடுத்துச் செல்லாமல் சென்றுவிட்டான். எனினும், இரண்டு நாட்களின் பின்னர், நாட்டின் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அவன் கைது செய்யப்பட்டதுடன் பயங்கரவாதக் குற்றங்கள் பலவற்றுக்குக் குற்றஞ் சாட்டவும்பட்டான்.

அவன் எவ்விதக் குற்றமும் புரியவில்லை என்றும் எனவே அவனது கைதும் தடுத்து வைப்பும் முற்றிலும் சட்டரீதியற்றதும் தேவையற்றதும் ஆகுமென அவனது சட்டத்தரணி வாதிடுகின்றார்.

கேசவன் இலங்கையின் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் ஏதேனும் குற்றம் புரிந்துள்ளானா? ஆராய்க.

4. நாட்டினுடைய சட்ட ஆட்சிநெறிப்பரப்பில் தனிநபர் சுதந்திரத்துக்கு இன்று கொடுக்கப்படும் முக்கிய இடத்தின் பின்னணியில் பார்க்கையில், ஒரே குற்றத்தைப் புரிவதில் பங்குபற்றிய அனைவருக்கும், அக்குற்றத்தைப் புரிவதில் அவர்களுடைய உண்மையான பங்கினைப் பற்றி எதுவுமே கருத்திலெடுக்காது, பொது எண்ணத்தைச் சூட்டுதல் என்பது நியாயமற்றது எனக் கருதப்படுவதால் இது சீர்செய்யப்பட வேண்டும் என்று வாதிடப் படுகின்றது.

நீர் உடன்படுகின்றீரா? உமது விடைக்கான காரணங்கள் தருக.

5. (அ) கமால் என்பவன் தனது முன்னாள் காதலியான ரமணி என்பவளது முகத்தை நிரந்தரமாகவே உருச்சிதைக்கக் கருதி, ஒரு குடுவை கொதிநீரை அவளது முகத்தில் வீசுகிறான். எனினும் அவள் திடீரென தனது முகத்தை இடது பக்கம் திருப்புவதால் அவளது வலது கண்ணில் எரிகாயம், வீசப்பட்ட நீரினால் ஏற்படுகின்றது.

கமாலினால் புரியப்பட்ட குற்றம் என்ன? உமது விடைக்கான காரணங்களைத் தருக.

(ஆ) தவறான தடையேற்படுத்துதல் (wrongful restraint) என்பதையும் தவறான மறித்துவைப்பு (wrongful confinement) என்பதையும், தீர்ப்புச்சட்ட அதிகார ஆதாரங்கள் தந்து, ஒப்பிட்டு வேறுபடுத்துக.

6. மாலா என்பவளும் ரமேஸ் என்பவனும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நட்புக்கொண்டனர். மாலாவைத் தனது பழைய நண்பர்களுக்கு அறிமுகஞ் செய்து வைப்பதற்காக அவளைத் தனது சொந்த ஊருக்கு வருகைதருமாறு ரமேஸ் தவணை விடுமுறையின்போது அழைத்தான். கல்விச் சுற்றுலா ஒன்றில் செல்வதாகச் சாட்டுச்சொல்லித் தனது பெற்றோரிடமிருந்து அனுமதி பெற்று மாலா அந்தப் பயணத்தை மேற்கொண்டாள். அவனது சொந்த ஊருக்கு மிக அருகிலுள்ள சிறிய நகரத்துக்கு அவள் மாலைப்பொழுதில் வந்தடைந்ததுடன் அவளைப் பேருந்து நிலையத்தில் ரமேஸ் வரவேற்றான். அவனது சொந்த ஊரைச் சென்றடைவதற்கு மேலும் பத்துக் கிலோ மீற்றர் தூரம் பயணிக்க வேண்டியிருந்தது. இருட்டி விட்டதால், அந்த நகரத்தில் பக்கத்திலுள்ள விடுதியொன்றில் தாங்கள் தங்குவதென்றும் மறுநாள் காலையில் கிராமத்துக்குச் செல்வதென்றும் அவன் மாலாவை நம்பச் செய்தான். மாலா தயக்கமின்றி அதற்குச் சம்மதித்தாள்.

அவர்கள் ஒரே அறையில் தங்கியதுடன் விடுதியின் பணியாளர்களி னால் வழங்கப்பட்ட உணவினையும் பகிர்ந்து கொண்டனர். உணவுண்டதன் பின்னர், தலைச்சுற்றலை உணர்ந்த மாலா, நீண்டதூரப் பயணத்தின் காரணமாகத் தான் மிகவும் களைப்புற்றிருப்பதாகவும் உடனடியாகவே உறங்கச்செல்ல விரும்புவதாகவும் ரமேஸுக்குக் கூறினாள். ஆயினும் அவள் விழித்திருப் பதையே ரமேஸ் விரும்பினான். ரமேஸின் கோரிக்கையை மறுத்து, ரமேஸின் கையலிருந்த தனது படுக்கைப் போர்வையினைப் பறித்தெடுத்துக் காண்டு அவள் உறங்கச் சென்றாள். மறுநாள் காலையில் அவள் எழுந்தபோது, உடல் முழுவதும் கடுமையான வலியினை உணர்ந்ததுடன் தனது கால்களில் இரத்தக்கறையினையும் அவள் கண்டாள். தன்னுடன் வீட்டி லிருந்து அவள் கொண்டுவந்திருந்த படுக்கைப் போர்வையினையும் அவளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

அவளால் கேள்விக்குட்படுத்தப்பட்டபோது, தனக்கு எதுவுமே தெரியாது என்று ரமேஸ் சாதித்தான். முதல் நாளிரவு இரவு உணவினைப் பகிர்ந்து கொண்ட போது தனக்கு மருந்தூட்டப் பட்டிருக்கலாம் என்று அவள் சந்தே கிக்கின்றாள். அவள் வீட்டுக்குத் திரும்பிச் சென்று தனது பெற்றோரிடம் முறையிட்டபோது, அவர்கள் கூட்டாகவே பொலிஸில் முறைப்பாடொன்றைச் செய்தனர்.

புலன்விசாரணையின்போது, மாலாவுடன் குறிப்பிட்ட தினத்தன்று தான் உடலுறவில் ஈடுபட்டதை ரமேஸ் ஒப்புக்கொண்டதுடன் ஆனால் அது அவளது பூரண சம்மதத்துடனேயே இடம்பெற்றதாகவும் கூறினான்.

மேற்கண்ட சூழ்நிலையில் சம்பந்தப்படும் சட்டப் பிரச்சனைகள் யாவை? மாலா பாடசாலை மாணவி ஒருத்தியாகவும் ரமேஸ் அவளது முகப்புப் புத்தக நண்பனாகவும் இருந்திருந்தால் உமது விடை வேறுபடுமா?

7. குற்றஞ்சாா்த்தப்பட்டவர் சித்த சுவாதீனமற்றவா் என்ற எதிா்வாதமானது, ஆங்கிலச சட்டத்தில் நபரொருவரின் மனவொழுங்கின்மை / மனக்குழப்பம் என்பதன் பரந்துபட்ட நிலைமைகளை உள்ளடக்கத்தக்கதாக வளா்ந்து வந்துள்ளபோதிலும், இந்த எதிா் வாதமானது, மிகப் பழமைவாய்ந்த Mc Naughten விதிகளின் வெறும் பிரதிபலிப்பாகவே இலங்கையில் காணப் படுவதுடன் குற்றஞ்சாா்த்தப்பட்டுள்ள பல நபா்களும் அதனால் இந்த எதிா்வாதத்தினைக் கோருவதிலிருந்தும் தடுக்கவும்படுகின்றனா.

மேற்போந்த கூற்றினை இங்கிலாந்தினதும் இலங்கையினதும் பொருத்தமான நியதிச்சட்ட ஏற்பாடுகளின் உதவியுடன் ஆராய்க. உமது விடையினை தீா்க்கப்பட்ட வழக்குகளினால் ஆதாரப்படுத்துக.

*******